**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C)
**SPLCC.No.18/2025 - PW-37**

| | |
|---|---|
| Name | திரு. ராஜேஷ் |
| Father Name | ஹரி |
| Village /Area | 38 சக்கரமல்லூர் கிராமம் |
| Taluk | ஆற்காடு |
| Occupation | கிராம நிர்வாக அலுவலர் |
| Age | 40 |
| Religion | இந்து |
| Aadhar Card No. | 4658 0828 7706 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 04.12.2025.

**3 முதல் 15 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆற்காடு வட்டம் சக்கரமல்லூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். 2011 ம் ஆண்டு முதல் 2016 வரை நான் மேல்புதுப்பாக்கம் நான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன்.2012 ஆம் ஆண்டில் நான் குப்புடிசாத்தம், தோனிமேடு, பென்னகர், பாரிமங்கலம் கிராமங்களுக்கு பொறுப்பு கிராம நிர்வாக அலுவலராக இருந்தேன். 2012 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7 ம் தேதி மற்றும் 11 ம் தேதி ஆகிய இரு நாட்களிலும் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் குப்புடிசாத்தம் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு வந்தார். ஆய்வாளர் 15, 20 நபர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலை என்னிடம் கொடுத்து அவர்களை அழைத்து வருமாறு சொன்னார். அவ்வாறு சொன்ன நபர்களை என்னுடைய கிராம நிர்வாக உதவியாளர் ராஜாராம் மூலம் என் அலுவலகத்துக்கு அழைத்து

வந்தேன். நான் ஆய்வாளரிடம் கேட்டதற்கு நீர் முழ்கி மோட்டார் சம்மந்தமாக விசாரிக்க வேண்டுமென சொன்னார். அந்த 20 விவசாயிகளிடம் விசாரித்த பிறகு ஆய்வாளர் மாதிரி கையெழுத்துக்கள் வாங்கினார்.அவ்வாறு மாதிரி கையெழுத்துக்கள் விவசாயிகளிடம் பெற்ற பிறகு நான் சாட்சியாக கையெழுத்து போட்டேன்.என்னிடம் காட்டப்படும் வி.ராஜகோபால் என்பவர் மாதிரி கையொப்பங்கள் போட்ட தாளில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான் அந்த என்னுடைய கையெழுத்து **அ.சா.ஆ.23** ஆகும். அ.சா.ஆ.9 ல் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். வி.மணி என்பவர் மாதிரி கையொப்பங்கள் போட்ட தாளில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான் அந்த என்னுடைய கையெழுத்து **அ.சா.ஆ.24** ஆகும். அ.சா.ஆ.13,14 ல் உள்ள சாட்சி கையெழுத்துகள் என்னுடையது தான். கே.மண்ணு என்பவர் மாதிரி கையொப்பங்கள் போட்ட தாளில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான் அந்த என்னுடைய கையெழுத்து **அ.சா.ஆ.25** ஆகும். இது சம்மந்தமாக என்னை வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை 3 முதல் 11, 13, 14 எதிரிகள் தரப்பில் –**

இல்லை

**குறுக்கு விசாரணை 12, 15 எதிரிகள் தரப்பில் –**

இல்லை

H. Rajappa.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness and admitted by him/her to be correct.

M. 4-12-25

Principal District and Sessions Judge,
Ranipet